## பாடம் மூன்று



# இயேசு எப்படிப்பட்டவராக இருந்தார்?

மேலே உங்கள் பெயரை எழுதி கொடுக்கப்பட்ட காலி இடங்களில் வேதாகம வசன குறிப்புகளை நிரப்பவும்.

## அவர் முற்றிலும் பாவமற்றவராயிருந்தார்

மனிதர்களின் சிந்தனைகளையும், வார்த்தைகளையும், செயல்களையும் நியாயந்தீர்க்க கடவுளால் நியமிக்கப்பட்ட நபர் பாவமற்றவராக இருத்தல் அவசியம். நாம் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ளும் ஒவ்வொன்றிலும் அவருடைய பூரணத் தன்மை வெளிப்படுகிறது.[1] அவரது வாழ்க்கை ஒரு கட்டிடம் கட்டுகிறவன் பயன்படுத்தும் தூக்குநூல் போன்றது. நாம் எவ்வாறு நேர்மையாக ( நல்லவர்களாக ) வாழவேண்டும் என்பதற்குரிய அளவுகோல் போலவும் இருக்கிறது.



ஒரு பரிபூரணமான நேர்மையான வாழ்க்கை

இப்பாடத்தில் எவ்வாறு இயேசு தன்னுடைய சொந்த போதனைகளில் அசாதாரணமான உயர்ந்த திட்டங்களின்படி வாழ்ந்தார் என்பதை நாம் பார்க்கப் போகிறோம். இதனால் அவரே இவ்வுலகத்தின் நியாயாதிபதி என உரிமை கொண்டாடுவதை உண்மையாக்குகிறது (பாடம் 2). இயேசு முடிவற்ற அன்பும், இரக்கமும் சுகவீனர் மீது மட்டுமல்ல பாவிகள் மீதும் அன்பு கொண்டவர் என பொருள்படும்!

### யோவான் ஸ்நானகன் இயேசு பாவமில்லாதவர் என அறிந்திருந்தார்,

யோவான் மக்களை இயேசுவுக்கென்று ஆயத்தப்படுத்தவந்தார், பாவங்களிலிருந்து திருந்தி வந்தவர்களுக்கெல்லாம் ஞானஸ்நானம் கொடுத்தார், தான் இயேசுவின் பாதரட்சைகளின் வாரை அவிழ்கிறதற்கு கூட தகுதியற்றவன் என்று சொன்னார். இதன் அர்த்தம் என்னவெனில் யோவான் கெட்ட மனிதன் என்ற பொருளில் அல்ல மாறாக இயேசு அப்படிப்பட்ட நல்லவராக இருந்தார் என்பதே ஆகும் மாற்கு 1:7 ஐ பார்க்கவும்

வரலாற்றுக் குறிப்பு : யோவான் ஸ்நானகன் இயேசுவைவிட மிகவும் வித்தியாசமானவர். அவர் கடினமான ஆடைகளை அணிந்திருந்தார், அவர் வெட்டுக்கிளிகளையும் காட்டுத் தேனையும் புசித்தார்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

யோவான் இயேசுவிற்கு ஞானஸ்நானம் கொடுக்க விரும்பவில்லை, ஏனெனில் அவர் பாவமற்றவராயிருந்ததால் மனந்திரும்பவேண்டிய அவசியமில்லை என்பதை யோவான் அறிந்திருந்தார்.[2]

### இயேசு பாவமற்றவர் என்று பிதாவாகிய கடவுள் அறிக்கையிட்டார்

இயேசு ஒருவர் மட்டுமே கடவுளுக்கு முற்றிலும் பிரியமானவர். பரலோக ராஜ்யம் அவரையன்றி வேறு ஒருவரையும் தனக்குப் பிரியமானவர் என்று அறிக்கையிடவில்லை. இயேசு ஞானஸ்நானம் பெறும்போது இவர் என் நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என கடவுள் வெளிப்படையாக அறிக்கை செய்தார். மாற்கு 1:11ஐ பார்க்கவும்.

இயேசு ஒருவரே முற்றிலுமாக கடவுளை பிரியப்படுத்தினார்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

கடவுள் மற்றொரு சமயம் தனது குமாரனைக் குறித்து இதற்கிணையான அறிக்கை ஒன்றை செய்தார்.[3] ஒரு நபர் ஒரு பரிசுத்தமான கடவுளுக்குப் பிரியமானவனாக இருக்க வேண்டுமானால் அவன் மிகவும் பரிசுத்தமானவனாக இருக்க வேண்டும்.

[1] 1 யோவான் 3:5.
[2] மத்தேயு 3:13 -14.
[3] மத்தேயு 17:5.

### இயேசு பாவமில்லாதவர் என்று புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

அவர் ஒருபோதும் சோதனைக்கு இணங்கவில்லை

இயேசு சோதனையின் வல்லமையை அறிந்திருந்தார். ஆனாலும் அவர் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அவ்வாறு அவர் அனுமதித்திருந்தால் அவரும் நம்மைப்போல் பாவியாயிருந்திருப்பார். எபிரேயர் 4:15.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

இயேசுவின் பூரணத்துவம், மற்றவர்களின் பூரணமற்ற நிலைமையைக் காட்டுகிறது. பேதுருவும் ( அவரது சீடன் ) இயேசுவின் பிரசன்னத்தில் தனது சொந்த பாவத்திலிருந்து வெற்றிகொள்ளும் நிலைமையை உணர்ந்தான்.[4] இயேசு பாவமறியாதவராயிருந்தார்.[5] அவரது வாழ்க்கையின் பதிவுகளிலிருந்து இதற்கான ஆதாரங்களை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.



அன்பு நிறைந்த கரம்

## அவர் தன்னுடைய போதனையின்படி வாழ்ந்தார்.

நாம் எப்படி கடவுளை நேசிக்க வேண்டும், நாம் எப்படி ஒருவரையொருவர் நேசிக்க வேண்டுமென்று இயேசு சொன்னதை நீங்கள் நினைவு கூறுகிறீர்களா? நாம் நம்மிடத்தில் அன்பு கூறுகிறதுபோல பிறரிடத்திலும் அன்புகூறவேண்டும் என்று இயேசு சொன்னார், இயேசு இன்னும் கூடுதலாகச் சொன்னார்,[6] நாம் நம்முடைய பகைவரிடத்திலும் அன்புகூறவேண்டும் - இது நாம் செய்வதற்கு எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் கடினமானதொன்றாகும். இந்த நிலை நம்மால் முடியாததாக இருந்த போதிலும், இயேசு சாதித்துக்காட்டினார்.

### இயேசு முழுமையாக கடவுளை நேசித்தார்

பாடுகளின் எண்ணம் அவரை மேற்கொண்டபோது இயேசு தமது சித்தத்தைத் தம்முடைய பரலோகப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். பார்க்கவும் லூக்கா 22:42.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

அவர் மற்றவர்களை குறித்து மட்டும் நினைத்தார்.

### இயேசு தம்மில்தானே அன்பு கூர்ந்தது போல பிறரிலும் அன்பு கூர்ந்தார்

இயேசு முற்றிலும் தன்னலமற்றவர். அவர் சிலுவையில் மரிக்கும் நேரத்திலும் தன்னைப்பற்றி நினையாமல், பிறரைப் பற்றியே நினைத்தார். பயங்கரமான வேதனையிலிருந்தபோதும், அவர் தம் தாயாரை நினைவுகூர்ந்து தன்னுடைய ஒரு சீடனிடம் அவர்களை கவனமாக பார்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். வாசிக்கவும் யோவான் 19:26-27 வசனம் 27ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...



### இயேசு தன் பகைவர்களையும் நேசித்தார்.

இயேசுவை சிலுவையில் அறைந்து மிகவும் கொடூரமான தீங்கு செய்தபோதும் அவர் கடவுளிடத்தில் அவர்களை மன்னிக்கும்படி கேட்டார் - இதை அவர் முன்பே செய்ய ஆயத்தமாய் இருந்தார். பார்க்கவும் லூக்கா 23:34.

நாம் நமது நண்பர்களை நேசிப்பது எவ்வளவு கடினம் எனக் காண்கிறோம்!

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

---

4 லூக்கா 5:8. அவன் சொன்னான் "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப் போக வேண்டும்."

5 2 கொரிந்தியர் 5:21

6 மத்தேயு 22:39.

# அவர் மனதுருக்கம் நிறைந்தவர்



அவர் நோய்களைக்கண்டு அசைக்கப்பட்டார்

இயேசு செய்த அநேக அற்புதங்களுக்குக் காரணம் அவரின் இரக்கம் தான் என்பதை நாம் பாடம் 1ல் பார்த்தோம். அவருடைய உருக்கமான இதயம் மற்றவர்களின் தேவையை உணர்ந்ததுமல்லாமல் அவர் அவர்களைக் குணப்படுத்தவும் செய்தார்.

## பலருக்காக அவரது இரக்கத்தைப் பற்றி நாம் ஆலோசனை செய்வோம்

இயேசு நற்செய்தியைப் பிரசங்கிக்கவே வந்தார். ஆனால் அநேக நோயாளிகளின் நிலை அவரை ஆழமாக அசைத்தது, எனவே அவரிடம் கொண்டுவரப்பட்டவர்களையெல்லாம் குணமாக்கினார்[7]. பார்க்கவும் மத்தேயு 14:14

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

## இரண்டு நபர்களிடம் அவர் காட்டின இரக்கத்தைச் சிந்திப்போம்

அவர் பார்வையற்றோருக்கு பார்வை கொடுத்தார்

பார்வையற்றவர்கள் வாழ்வதற்குப் பிச்சையெடுக்க வற்புறுத்தப்பட்டனர். அவர்களது பரிதாபமான நிலை இயேசுவின் இதயத்தைத் தொட்டது, அவரை அனுதாபப்படும்படியாகச் செய்தது. பார்க்கவும் மத்தேயு 20:34.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

இதனைப் போன்று அநேக எடுத்துக்காட்டுகள் நோயாளிகளின் மீதான அவரது இரக்கத்தைக் காண்பிக்கின்றன. அவர் பசியாயிருக்கிறவர்கள்மீதும்,[8] வருத்தப்படுகிறவர்கள்மீதும்[9] இரக்கம் கொண்டார்.

# அவர் பாவிகளிடத்தில் மிகுந்த இரக்கமுடையவராக இருந்தார்



ஒரு பலத்தக்காற்றைப் போன்றது

பலமான காற்று வீசும்போது நேராக நாம் நிற்பது மிகவும் கடினமானது என நாம் அறிவோம். இதுவே சோதனையின் ஒரு சித்திரமாகும். சோதனை ஒரு பலமான காற்றைப்போன்றது. இயேசு சோதனையின் வல்லமையை அறிந்திருந்தார், பாவத்திற்குள் ஒரு மனிதனை இழுத்துச்செல்லும் துன்பத்தையும் அறிவார், இருந்தபோதிலும் அவர் பாவமில்லாதவராக இருந்தார், அவர் பாவத்தின்பிடியில் சிக்குண்டவர்கள்மீது இரக்கமுடையவராக இருந்தார்.

இயேசு தன்னுடைய காலத்தில் மோசமான சில மக்களுடன் உணவருந்தினார். சிலர் அவர் பாவிகளிடம் மிகவும் சிநேகமாயிருந்ததை வெறுத்தார்கள், ஆனால் தாங்களும் பாவிகள்தான் என்பதை அவர்கள் தெளிவாக அறிந்துகொள்ளவில்லை.[10]

## இயேசு பாவிகளிடம் சென்றார்

பூரணமான அன்பு

அவர் பரிபூரணராயிருந்ததால் நாம் பாவிகளை விரும்புவதைவிட அவர் பாவிகளை அதிகம் நேசித்தார். பாவிகளை வரவேற்றதினால் அவர் ஏளனம் செய்யப்பட்டார். பார்க்கவும் லூக்கா 15:2.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

[7] மத்தேயு 4:23-24, மற்றும் 8:16-17

[8] மாற்கு 8:2-3.

[9] மத்தேயு 9:36, மற்றும் வாசிக்கவும் லூக்கா 7:11-15ஐ மற்றுமொரு உதாரணமாக இயேசுவின் இரக்கத்தைக் காட்ட

[10] மத்தேயு 11:19

அவர் பாவிகளை நேசித்தார், பாவத்தையல்ல

இயேசு, பாவமானது மனித வாழ்வினை அழித்து நாசமாக்கிவிடும் என்று அறிந்திருந்ததால், அவர் பாவிகளை மிகவும் அதிகமாய் நேசித்தார். மேலும் அவர் பாவமானது அவர்களை பரலோகத்திலிருந்து விலக்கிவிடும் என்று அறிந்திருந்தார். அவர் பாவிகள்மீது முழுமையாக அன்புகொண்டார் அல்லது வேதாகமம் சொல்கிறபடி 'கிருபையினால் நிறைந்தவராய்' காணப்பட்டார். பார்க்கவும் யோவான் 1:14.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

**பாவிகள் தாங்கள் இயேசுவிடம் இழுக்கப்படுவதை உணர்ந்தனர்.**



அவர் விகாரமானவைகளை நேசித்தார்

தங்களுடைய பாவத்தை உணர்ந்தவர்கள், அவரால் கவரப்பட்டனர், ஏனென்றால் அவர்கள் தங்கள்மீதான அவரது அன்பை உணர்ந்தார்கள் வாசிக்கவும் லூக்கா 7:37-38. வசனம் 37ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

நாம் ஏற்கெனவே பார்த்தபடி இயேசு 'இழந்துபோனவர்களை' (பாடம் 2) இரட்சிக்கவே வந்தார். கீழே கொடுக்கப்பட்ட குறிப்புகளில் இன்னும் அதிகமான உதாரணங்களாக, பாவிகள் இயேசுவினால் மீட்டுக்கொள்ளப்பட்டனர் என்று காணலாம்.[11]

# முடிவாக

இயேசுவின் குணாதிசயத்தைப் பற்றிய இந்தப் பாடத்தை முடிக்க வேண்டுமென்றால் நாம் அவரது தைரியத்தைப்பற்றிச் சொல்லாமல் முடிக்க முடியாது. பலமான எதிர்ப்புகளை சந்தித்தபோதும் அவர் முற்றிலும் பயமற்றவராக இருந்தார். இது அவருடைய பரிபூரணத்தின் மறுபக்கமாகும். கோழையான, பயப்படுகின்ற ஒரு மனிதன் பரிபூரணமானவனாக இருக்கமுடியாது.

இயேசு பயமில்லாதவராக இருந்தார்

தன்னுடைய காலத்திய தலைவர்களைக் கடிந்துகொண்டபோதும்[12] தேவாலயத்தைத் தவறாக பயன்படுத்தியவர்களை வெளியே துரத்தியபோதும் தன்[13] மிகுந்த தைரியத்தை வெளிப்படுத்தினார். மேலும் தாம் தண்டிக்கப்பட்டபோது ரோம ஆளுநர் முன்னால் அமைதியாக நின்றார்.[14]

மனிதர்கள் கூற்றுப்படி பார்த்தால், இயேசு அதிகாரிகளோடு எதிர்த்து நின்றதே அவரது மரணத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது (அடுத்த பாடம்).

[11] மத்தேயு (மத்தேயு 9:9-13); சகேயு ( லூக்கா 19:1-10 ); மரிக்கும் கள்ளன் ( லூக்கா 23:39-43 )
[12] லூக்கா 11:42-54
[13] மாற்கு 11:15-19.
[14] யோவான் 19:5-11.